# பரத நாட்டியம்

தரம்

# 13

## ஆசிரியர் வழிகாட்டி

(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)




அழகியற் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இலங்கை
www.nie.lk
info@ni.lk

# பரத நாட்டியம்

## ஆசிரியர் வழிகாட்டி
## தரம் 13

**(2018ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதற்கானது)**

**அழகியற்கல்வித் துறை,**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞான பீடம்,**
**தேசிய கல்வி நிறுவகம்,**
**மஹரகம.**
**www.nie.lk**
**info@ni.lk**

பரத நாட்டியம்
ஆசிரியர் வழிகாட்டி
தரம் - 13
பாடத்திட்டம் - 2017

தேசிய கல்வி நிறுவகம்

ISBN

முதற் பதிப்பு : 2017
தேசிய கல்வி நிறுவகம்

அழகியற் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம.
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

***அச்சுப் பதிப்பு:***

தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்குமான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக் கோலத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்பெறும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப் பெறுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மையைத் தேசிய மட்டத்திற் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடையும் பொருட்டு, பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்ளும் சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பெற்றுள்ள ஆசிரியர் வழிகாட்டியை, ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், எதிர்பார்க்கப் பெறும் அடைவுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர் களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். மகிழ்வளிக்கத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்,**
மொழிகள் மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

## கலைத்திட்டக் குழு

| | | |
|---|---|---|
| ஆலோசனையும் வழிகாட்டலும் | : | கல்விசார் அலுவல்கள் சபை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| பாட நிபுணத்துவ ஆலோசனை | : | திரு. சுதத் சமரசிங்ஹ,<br>பணிப்பாளர் - அழகியற்கல்வித் துறை. |
| பாட இணைப்பாக்கம் | : | திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்,<br>செயற்றிட்டத் தலைவர்,<br>அழகியற்கல்வித் துறை. |
| எழுத்தாளர் குழு<br>(உள்வாரி) | : | திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்,<br>செயற்றிட்டத் தலைவர்,<br>அழகியற்கல்வித் துறை. |
| (வெளிவாரி) | : | திருமதி பாரதி சிவயோகநாதன்,<br>ஆசிரிய ஆலோசகர்,<br>வலயக்கல்வி அலுவலகம், கொழும்பு - 02. |
| மொழி மேற்பார்வை | : | திரு.து.இராஜேந்திரம்,<br>ஓய்வு பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>திறந்த பல்கலைக்கழகம். |
| கணினி கோர்ப்பும் வடிவமைப்பும் | : | செல்வி செல்வரஞ்சினி செல்லத்துரை,<br>ஆசிரிய நூலகர்,<br>யா / தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை<br>மகா வித்தியாலயம். |
| அட்டைப்பட வடிவமைப்பு | : | திரு. ரவீந்ர தேநுவர. |

# ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள்.

2017 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தரம் 12 இற்கான பரதநாட்டிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தற் செயன்முறையை வெற்றிகரமாக நடத்துவதற்குத் துணைபுரிவதற்காகவே இந்த ஆசிரியர் வழிகாட்டி உங்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றது. இதனைப் பயன்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

- ❖ பாடசாலையின் வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கமைவாக நேரமுகாமை செய்தல்.

- ❖ 5 தேர்ச்சிகளின் கீழ், வரிசைப்படுத்தப்பட்டுள்ள உள்ளடக்கத்திற்கமைவாக 1.0 தொடக்கம் 5.0 வரையிலான செயன்முறைத் தேர்ச்சிகளின் மட்டங்களுக்காக மாதிரிச் செயற்பாடானது தரப்பட்டுள்ளது. அந்தந்தத் தேர்ச்சி மட்டத்திற்கமைவாக விதந்துரைக்கப்பட்டுள்ள 5 தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு, திட்டமிட்டுச் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

- ❖ தாமே 5 செயற்பாடுகளைச் செயற்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனமெடுப்பது பயனுடையதாகும்.
  - ➢ அழகியல் சார்ந்த அன்றேல் பாடத்துடன் இணைந்த சுவாரசியமான முன்வைப்பொன்றின் மூலம் களிப்பூட்டத்தக்கவாறு படிக்கும் விடயங்களின் மூலம் மாணவரைப் பாடத்தின் பால் ஈர்த்தல். முன்நிலை மீட்டல், ஊக்கமளித்தல் மூலம் பாடச் செயற்பாட்டை அணுகுதல்.
  - ➢ மாணவரது இயல்பான ஆற்றல்களை இனங்கண்டு ஆக்கபூர்வமான கற்றல் கற்பித்தல் முறைகளை மேற்கொண்டு பின்னூட்டலைக் கையாண்டு செயற்பாட்டை இறுதிவரை இட்டுச் செல்லல்.
  - ➢ முன்வைப்புக்கள், மதிப்பீடு, மீளாய்வு, பின்னூட்டல் வேலைகள், ஒப்படைகள் போன்றவற்றை உள்ளடக்கி ஒட்டுமொத்தப் பாடத்தை நிறைவு செய்தல்.
  - ➢ இந்த ஆசிரியர் வழிகாட்டி ஒரு வழிகாட்டல் மாத்திரமே ஆகும். பாடம் சார்ந்த நூல்கள், இணையத்தளங்கள் போன்ற ஊடகங்களை உசாவுதல் மூலம் மாணவர் அறிவூட்டம் பெறுவதால் கற்றல் - கற்பித்தற் செயன்முறையை மேலும் செழுமைப்படுத்திக் கொள்ளலாம்.

- ❖ அறிமுகம் செய்யப்பட்டுள்ள 5 தேர்ச்சிகளும் தனியாளின் ஆளுமை விருத்தியை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளமையால் 5 தேர்ச்சிகளுக்குமுரிய விடய உள்ளடக்க முறைமையை வகுப்பறையில் நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

- ❖ பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டவாறு மூன்று தவணைக்குரிய செயற்பாட்டினை வகுப்பறையில் நடைமுறைப்படுத்துக.

| தவணை 1 | தவணை 2 | தவணை 3 |
|---|---|---|
| செயற்பாட்டு இலக்கம் :<br>1.1.1, 2.1.1, 3.8.1, 3.1.1, 4.1.1, 4.2.1, 4.4.1, 5.1.1, 5.4.1 | செயற்பாட்டு இலக்கம் :<br>1.2.1, 2.2.1, 3.2.1 3.3.1, 3.4.1, 4.3.1, 4.3.2, 4.5.1, 5.2.1, 5.5.1 | செயற்பாட்டு இலக்கம் :<br>1.3.1, 2.3.1, 3.5.1, 3.6.1, 3.7.1, 4.7.1, 4.7.1, 5.3.1, |

**தேர்ச்சி 1:0 : நயத்தல்**

- நயத்தல் தொடர்பான கற்பித்தலை மேற்கொள்ளும் போது, மாணவர்களின் இரசனையைத் தூண்டி அவர்களின் வெளிப்பாட்டை வெளிக்கொண்டு வரவேண்டும். அதற்குக் கவர்ச்சியான முறையில் கற்பித்தற் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும்.

**தேர்ச்சி 2:0 : ஆக்கத்திறன்**

- ஆக்கத்திறனில் மாணவர்களை ஈடுபடுத்தும் போது, அவர்களுக்குரிய வழிகாட்டல்கள் மாத்திரம் ஆசிரியரினால் வழங்கப்பட வேண்டுமேயல்லாமல் எச் சந்தர்ப்பத்திலும் ஒரு நிகழ்வு ஆசிரியரினால் ஆக்கி வழங்கப்படக் கூடாது.

- அனைத்தும் மாணவர்களின் சொந்தக் கற்பனையாகவே இருக்க வேண்டும்.

**தேர்ச்சி 3:0 : செய்முறை**

- செய்முறைப் பயிற்சியில் ஈடுபடுத்தும் போது, பாத அசைவுகளில் குறித்த தேர்ச்சி மட்டத்தை அடைந்த பின்பு தான் கை அசைவுகளுக்குரிய பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

- பாடவேளை போதாதவிடத்து மேலதிக வகுப்புக்களை நடத்தி மாணவர்களைக் குறித்த மட்டத்தை அடையச் செய்ய வேண்டும்.

- முதலில் காற்செய்கையையும், பின்னர் கைச் செய்கையையும் தனித்தனியாகப் பயிற்சியளித்துத் தொகுத்தல் வேண்டும்.

**தேர்ச்சி 4:0 : அறிமுறை**

- அறிமுறைப் பாடப்பகுதிகள் அனைத்திற்கும் அன்றைய தினக் கற்றல் நடைபெற்று முடிந்த பின்பு மணவர்கள் குறிப்பெடுத்திருத்தல் அவசியமாகும்.

- குறிப்புக்கள் திருத்தப்பட்டு மாணவர்கள் அவற்றை வீட்டில் விரிவான வசன ஆக்கம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

- அதன் பின்புதான் தேவையேற்படின் ஆசிரியர்கள் விரிவான விளக்கக் குறிப்பு வழங்க வேண்டும்.

- எக்காரணம் கொண்டும் ஆசிரியர் வழிகாட்டியில் வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்புக்கள் அப்படியே மாணவர்களுக்கு வழங்கப்படலாகாது.

- அத்துடன், ஆசிரியரின் தேடலும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- அடவுகள், உருப்படிகளுக்கான குறியீட்டு முறை விளக்கம் அளிக்கப்படும் போது, முதலில் ஒவ்வொரு தட்டிற்குமுரிய சொற்கட்டுக்கள் கீழ்காட்டியவாறு எழுதப் பயிற்றுவிக்கவும்.

  **உ+ம் தா தெய் தெய்த அடவு**

**தேர்ச்சி 5.0 : கலாசாரப் பின்னணி**

- அறிமுறைப் பாடப்பகுதிக்குரிய கற்பித்தல் நுட்பங்களை இதற்கும் பயன்படுத்தலாம்.
- ஆசிரியரின் தேடலுடன் மாணவர்களின் தேடல்களும் இணைக்கப்பட்டு ஒப்படை மூலம் விடயங்களை இற்றைப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

உ-ம் : ஆலயங்களில் நடனக்கலை என்னும் தேர்ச்சி மட்டத்தில் ஆலயங்களில் தற்போது இடம்பெறும் நிகழ்வுகளை புதிதாகச் சேர்த்துக்கொள்ளலாம்.

பக்கம்

# உள்ளுறையாக

| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| கலைத்திட்டக்குழு | v |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் | vi - vii |
| • அறிமுகம் | ix - x |
| • தேசிய இலக்குகள் | xi |
| • அடிப்படைத் தேர்ச்சிகள் | xii -xiii |
| • பாடத் தேர்ச்சிகள் | xiv |
| **பாடத்திட்டம்** | xv - xxiii |
| கற்றல் கற்பித்தல் செயலொழுங்கிற்கான ஆவோசனைகள் | |
| தவணை I | 01- 17 |
| தவணை II | 18 - 34 |
| தவணை III | 35- 46 |

# அறிமுகம்

க..பொ.த சாதாரண தரக் கல்வியை நிறைவு செய்து கொண்டு, உயர் நிலைக் கல்வியைக் கற்கவரும் மாணவர்களுக்குப் பொருத்தமானதாகப் புதிய பரத நாட்டியப் பாடத்திட்டம் இங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. புதிய கல்வித் திட்டங்களும் புதிய எண்ணக்கருக்களும் இக்கலைத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உயர் தரத்திலும் இரசித்தல், ஆக்கத்திறன், செய்முறை, அறிமுறை, கலாசாரப் பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு இக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டு புதிய சாகரத்தின் இரண்டாம் கலைத்திட்டமாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

தற்கால உலகில் மாற்றமடையாத ஒன்று மாற்றம் ஆகும். அதற்கமைய கலைத்திட்டத்திலும் மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. எந்தவொரு கலைத்திட்ட மறுசீரமைப்பும் இரண்டு அம்சங்களில் மாற்றங்களைப் பிரேரிக்கின்றது.

(1) பாடச் சேர்க்கை - பாடக்கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்தல், பாடவிடயங்களை இற்றைப்படுத்தல்

(2) பாடவிடயங்களை மாணவரிடம் கொண்டு சேர்ப்பதற்காக முன்வைக்கப்படும் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை

மாணவர் மையக் கல்விக்கு முதலிடம் கொடுக்கின்ற இப்புதிய கலைத்திட்டமானது, மாணவர்களும் ஆசிரியரும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், மாணவர்களின் தேடிக் கற்றலை ஊக்குவிப்பதற்குரிய செயற்பாடுகள் பலவற்றைக் கொண்டதாகவும், கற்றல் - கற்பித்தல் என்பவற்றை தெளிவாகப் புரிந்து தாமே விருப்பத்தோடு ஈடுபடுவதற்கு ஏற்றவகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பல புதிய தேடல்களினூடாகக் கண்டறியப்ப்பட்ட விடயங்களை இப் புதிய கலைத்தித்தினூடாக எதிர்கால சமுதாயத்திற்கு வழங்கிப் புதிய சிந்தனைத் தூண்டலுக்கு வழியமைக்கின்றது..

**தற்காலக் கல்வி முறையின் மூன்று தூண்களாவன:-**

(1) அறிந்துள்ளவற்றைப் பேணிவருதல்.

(2) முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விடயங்களைக் கற்றல்.

(3) ஏற்கனவே கற்கப்பட்ட விடயத்தை மீண்டும் கட்டியெழுப்புதல் என்பனவாகும்.

இச்செயற்பாடு ஏற்கனவே அறிந்துள்ளவற்றைத் தொடர்ந்தும் மாற்றியமைத்துப் புதுமைப்படுத்தும் புதிய சமூகமொன்றை உருவாக்கும். இதுவரை கண்டறியப்படாதவை தொடர்பாக, இளம் சந்ததியினரை வழிப்படுத்துவது இன்றியமையாதது ஆகும். தேடலில் ஈடுபட்டு, ஏற்கனவே அறிந்துள்ளவற்றை மாற்றியமைத்தும், இதுவரை கண்டறியப்படாதவற்றைத் தேடியறிவதற்கும் மாணவர்களைப் பழக்கப்படுத்துவது இப்புதிய கல்வித் திட்டத்தின் நோக்கமாகும். அத்துடன் இலங்கையின் ஏனைய சாஸ்திரிய நடன வடிவங்களைக் கற்பதற்கும், அதனூடாகச் சமூகப் புரிந்துணர்தலை ஏற்படுத்தும் நோக்குடனும் சில தேர்ச்சி மட்டங்கள் வடிவமைக்கப்பட்டிள்ளன.

வெற்றிகரமான வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான திறன்கள், ஆற்றல்களை அதாவது ஒன்றிணைந்த ஆளுமைக்கு இன்றியமையாத சிந்தனைத் திறன் (Thinking skill ), சமூகத் திறன் (Social skill ), சுயதிறன் (Personal skill ) ஆகியவற்றை விருத்தி செய்வதற்குரிய காலமாகப் பாடசாலைக் காலத்தில் வழங்கப்படத்தக்கவாறு தயாரிக்கப்பட்ட ஒரு பொதுவான கலைத்திட்டம் இதுவாகும்.

வந்தபின் செயற்படும் அணுகுமுறைக்குப் பதிலாக, வருமுன் செயற்படும் அணுகுமுறையைக் கைக்கொள்வது இன்றைய எதிர்காலச் சந்ததியினருக்கு அவசியமானதொன்றாகும். எனவே, நாளைய உலகை வெற்றி பெறுவதற்காகத் தேடலை முனைப்பாகக் கொண்ட வகையில், இப்புதிய கலைத்திட்டம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்கால சமூகத்திற்குத் தேவையான ஆளுமையுடைய சமூகத்தை உருவாக்குவது இப்புதிய பாடத்திட்டத்தின் தாரக மந்திரமாகும்.

.

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

I. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

II மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

III. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

IV. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

V. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

VI. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

VII. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

VIII. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### I. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப்பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சி, நுண்ணறிவு.

### III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வும் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**V. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை 2003)

# பாடத் தேர்ச்சிகள்

- பரத நாட்டியத்துடன் தொடர்பான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் ஊடாக அறிவு, திறன், மனப்பாங்கை வளர்த்துக் கொள்வார்.
- சிறந்த நடனக் கலைஞராக மிளிர்வதற்கான ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்வார்.
- படைப்பாக்கத் திறனை விருத்தி செய்வார்.
- தேசிய, பன்னாட்டுக் கலைகளை அறிந்து மதிப்பளிப்பார்.
- அழகியல் நயப்புடையவராவார்.
- கலைஞர்களை மதிக்கும் உளப்பாங்கை வளர்ப்பார்.
- பண்பாட்டின்பால் பற்றுறுதியையும், மரபைக் கையேற்கும் மனப்பாங்கையும் விருத்தி செய்வார்.
- தன்னாற்றலை இனங்கண்டு, கலை நிகழ்வுகளை ஆற்றுகைப்படுத்தும் திறனை விருத்தி செய்வார்.
- சிறந்த தொடர்பாடற் திறனை விருத்தி செய்வார்.
- தாமாக முன்வந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றும் திறனைப் பெறுவார்.
- இயற்கையை நயந்து வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.
- நவீன தொழில்நுட்ப சாதனங்களைக் கையாளும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.
- வாழ்தொழிலுக்கான அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வார்.
- நுட்பங்களைக் கையாண்டு கைவினைக் கலைகளை ஆக்குவார்.
- குழுவாக இயங்கும் பண்பை விருத்தி செய்வார்.
- பன்மைக் கலாசார சமூகத்துடன் சிறந்த ஆளிடைத் தொடர்புகைளப் பேணுவார்.
- சமூக அங்கீகாரம், புகழ் என்பவற்றைப் பெற்றுக் கொள்வார்.
- கலை நுணுக்கங்களை அறிந்து அதனை விபரிக்கும், விமர்சிக்கும் ஆற்றல்களைப் பெற்றுக் கொள்வார்.
- கலைத் தேடலின் ஊடாகப் புதிய முன்வைப்புகளுக்கு முயற்சிப்பார்.
- மூத்த கலைஞர்களுக்குக் கௌரவமளிக்கும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்வார்.

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 1.0 | இலங்கை இந்திய சாஸ்திரிய நடனங்களை நயப்பார். | 1.1 வெவ்வேறு பிரதேசங்களுக்குரிய கூத்து வகைகளை நயப்பார். | • வடமோடி<br>• தென்மோடி<br>• காத்தவராயன் கூத்து<br>• காமன் கூத்து<br>• வசந்தன் கூத்து | • யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களுக்குரிய கூத்து வகைகளையும் மலையகம், மட்டக்களப்பு பிரதேசங்களுக்குரிய கூத்து வகைகளையும் ஒப்பிட்டு மதிப்பிடுவார். | 10 |
| | | 1.2 கிராமியக் கலைகளை நயப்பார். | • ஒயிலாட்டம்<br>• பொம்மலாட்டம்<br>• ஏந்தல் நடனம்<br>• குதிரையாட்டம் | • ஒயிலாட்டம், பொம்மலாட்டம், ஏந்தல் நடனம், குதிரையாட்டம் ஆகியவற்றின் ஆடல் வேறுபாடுகளைக் குறிப்பிடுவார்.<br>• உபகரணங்கள் பயன்படுத்தப்படும் நடனங்களை வேறுபடுத்துவார்.<br>• உடை, ஒப்பனை, இவை என்பவற்றை ஒப்பிடுவார். | 10 |
| | | 1.3 நாட்டிய நாடகங்களை நயப்பார். | • யக்ஷகானம்<br>• பாகவதமேளா<br>• குறவஞ்சி | • யக்ஷகானம், பாகவதமேளா, குறவஞ்சி ஆகியவற்றின் ஆடல் வேறுபாடுகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.<br>• ஆடல்களின் கதைக்கருக்களை ஆராய்ந்து முன்வைப்பார்.<br>• ஆடற்கதைகளின் இசை, உடை,ஒப்பனை என்பவற்றின் வேறுபாடுகளைக் கூறுவார். | 10 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 2.0 | ஆக்கத்திறனை வெளிப்படுத்துவார். | 2.1 கோர்வைகள் அமைத்து ஆற்றுகைப்படுத்துவார். | • ஆதி தாளத்தில் 4 ஆவர்த்தனத்திலும் ரூபகதாளத்தில் 6 ஆவர்த்தனத்திலும் ஜதி வேறுபாடுகளுடனும் கோர்வை அமைத்தல். | • யதிகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• அவற்றைப் பெயரிடுவார்.<br>• ஆதி,ரூபக தாளங்களில் குறித்த யதி அமைப்புடன் கோர்வைகள் அமைப்பார்.<br>• அவற்றைக் கொலுப்பிப்பார்.<br>• கோர்வைகளை அபிநயிப்பார். | 10 |
| | | 2.2 இராமாயாணப் பாடலுக்கு அபிநயம் அமைத்து ஆற்றுகைப்படுத்துவார். | • அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் | • பாடலைப் பாடுவார்.<br>• அபிநயம் அமைத்து ஆடுவார்.<br>• சஞ்சாரி பாவத்தை வெளிப்படுத்துவார். | 04 |
| | | 2.3 ஆடல்களுக்கான ஒப்பனைகளைப் புனைவார். | பரதம், கிராமிய நடனம், நடன நாடகம் ஆகியவற்றுக்கான வேடப்புனைவு செய்தல். | • சாஸ்திரிய, கிராமிய நடனங்களுக்கான ஒப்பனைகளை வேறுபடுத்திக் காட்டுவார்.<br>• நடன நாடகத்தின் பாத்திரங்களை ஒப்பனையால் வேறுபடுத்துவார்.<br>• முகச்சாயத்திற்குப் பயன்படும் பொருட்களின் பெயர் குறிப்பார். | 10 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 3.0 | நடன உருப்படிகளை ஆடியும் பாடியும் கொலுப்பித்துக் காட்டுவார். | 3.1 பரத நாட்டிய உருப்படிகளை அபிநயித்துக் காட்டுவார். | வர்ணத்தின் உத்தராங்கப் பகுதி<br>• சகியே....அல்லது<br>• சுவாமியை வரச் சொல்லடி...... | • வர்ணத்தின் உத்தராங்கப் பகுதியை இனங்கண்டு கூறுவார்.<br>• உத்தராங்கப் பகுதியில் இடம்பெறும் உப பகுதிகளின் பெயர்களைக் குறிப்பிடுவார்.<br>• உத்தராங்கப் பகுதியைப் பாடிக் கொலுப்பிப்பார்.<br>• உத்தராங்கப் பகுதியை அபிநயிப்பார். | 35 |
| | | 3.2 நாயக நாயகி பாவத்தினை வெளிப்படுத்தும் உருப்படியினை அபிநயிப்பார். | வருவேன் வருவேன் என்று. அல்லது. என்னமோ கனமாய் இருக்குதடி .<br>இராகம்- மோகனம் . தாளம்-ஆதி | • பதத்திற்குரிய முத்திரைகளைப் பயன்படுத்தி அபிநயிப்பார்.<br>• உரிய பாவத்துடன் பதத்தினை முன்வைப்பார். | 15 |
| | | 3.3 பல சரணங்களைக் கொண்ட உருப்படியினை அபிநயிப்பார். | ஹரிரிக என்ற அஷ்டபதி<br>இராகம் : பந்துவராளி<br>தாளம் : ஆதி | • அஷ்டபதியினை முகபாவத்துடன் அபிநயிப்பார்.<br>• இதனைப் பாடிக் கொலுப்பிப்பார். | 15 |
| | | 3.4 சிருங்கார ரசத்தை வெளிப்படுத்தும் உருப்படியினை அபிநயிப்பார். | • ஜாவளி<br>மாலை மயங்கும் நேரம்....<br>இராகம் : ஹிந்தோளம்<br>தாளம் : ஆதி | • ஜாவளியினை முகபாவத்துடன் அபிநயிப்பார்.<br>• ஜாவளியினைப் பாடிக்கொலுப்பிப்பார். | 15 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| | | | **அல்லது**<br>சரிக - கொங்கு<br>இராகம் : சுருட்டி<br>தாளம் : ஆதி | | |
| | | 3..5 பரத நாட்டிய நிருத்த உருப்படியை அபிநயித்துக் காட்டுவார். | தில்லானா<br>இராகம் : பிலகரி<br>தாளம் : ஆதி<br>**அல்லது**<br>இராகம் : அமீர்கல்யாணி<br>தாளம் : ரூபகம் | விறுவிறுப்பான. உருப்படியை. அபிநயிப்பர். | 15 |
| | | 3.6 கண்டிய நடனத்தின் அடிப்படை அடவுகளை அபிநயித்துக் காட்டுவார். | • பாஸரம்ப 1-8<br>• கொடஸரம்ப (1-5) | • பாஸரம்ப 1-8, கொடஸரம்ப 1-5 அடவுகளை அபிநயிப்பார். | 20 |
| | | 3.7 தட்டுக்கழியில் அடவுகளைப் பயிற்சி செய்வார். | • நட்டுவாங்கம்<br>• அடவுகள் | • மாணவர்கள் சகல அடவுகளுக்கும் நட்டுவாங்கம் செய்வார். | 25 |
| | | 3.8 பாதபேதங்களை ஆடிக்காட்டுவார். | • பாத பேதங்களும் அவற்றின் பிரிவுகளும் | • பாதபேதங்களைக் கூறுவார்.<br>• பாதபேதங்களின் வகைகளைக் கூறுவார்.<br>• பாதபேதங்களையும் அவற்றின் பிரிவுகளையும் அபிநயிப்பார். | 06 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 4.0 | நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் கோவைப்படுத்துவார். | 4.1 நடராஜ திருவுருவத்தினைப் பட்டீயற்படுத்துவார். | • நடராஜ திருவுருவத்தின் தத்துவம் | • நடராஜ திருவுருவத்தின் பகுதிகள் குறிப்பவற்றைப் பட்டியற்படுத்துவார். | 04 |
| | | 4.2 அரங்கம் பற்றி அறிந்து கொள்வார். | • அரங்கம் ஒலி, ஒளி<br><br>• அரங்கத்தில் விலக்கத்தக்கவை | • நாட்டிய சாஸ்திரம் கூறும் அரங்கம், தற்கால அரங்கம் என்பவற்றின் வேறுபாடுகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.<br>• ஒலி,ஒளி என்பன மேடை நிகழ்ச்சிகளுக்கு அளிக்கும் பங்களிப்பினை ஒழுங்கமைப்பார்.<br>• அரங்கத்தில் இடம்பெறக்கூடாதவை பற்றிய விடயங்களைக் கூறுவார். | 06 |
| | | 4.3 பரத எண்ணக்கருக்களைப் பட்டியற்படுத்துவார். | • 175 தாளச் சக்கரம்<br><br>• நாட்டிய நாடகமும் அதன் லக்ஷணமும்<br>• யக்ஷகானம்<br>• பாகவதமேளா<br>• குற்றாலக் குறவஞ்சி<br>• கூத்தனார்<br>• சாக்கியர் | • தாளங்களின் பெருக்கத்தைப் பட்டியற்படுத்துவார்.<br><br>• நாட்டிய நாடகம் எவ்வாறு அமையவேண்டும் என்பதைக் குறிப்பிடுவார்.<br><br>• யக்ஷகானம், பாகவதமேளா, குறவஞ்சி ஆகியவற்றின் அமைப்பு முறையினைக் குறிப்பிடுவார்.<br><br>• கூத்தனார், சாக்கியர் ஆகியோர் பற்றி அறிந்து குறிப்பிடுவார். | 04<br><br>14 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| | | 4.4 கிராமிய இசைக் கருவிகளை இனங்கண்டு பெயரிடுவார். | • தப்பு<br>• தாளம்<br>• பறை<br>• சங்கு<br>• மத்தளம்<br>• சேமக்கலம் | • கிராமிய இசைக் கருவிகளை அறிந்து கூறுவார்.<br>• கிராமிய இசைக் கருவிகளின் பயன்பாடு பற்றி அறிந்து கொள்வார். | 04 |
| | | 4.5 பரத நாட்டிய இசைக்கருவிகளை அறிந்து பெயர் குறிப்பார். | • வீணை | • வீணையின் அமைப்பு, அதன் பிரயோகம் பற்றி அறிந்து கூறுவார். | 02 |
| | | 4.6 கல்வி முறைமைகளை ஒப்பிட்டு வேறுபாடு காண்பார். | • குருகுலக்கல்வி<br>• நிறுவனக் கல்வி | • குருகுலக்கல்வி பற்றி அறிந்து குறிப்பிடுவார்.<br>• நிறுவனக் கல்வி பற்றி அறிந்து குறிப்பிடுவார்.<br>• குருகுலக்கல்வி, நிறுவனக்கல்வி இரண்டினையும் ஒப்பீடு செய்வார். | 04 |
| | | 4.7 பரதநாட்டியத்தை நவீன தொழில்நுட்பத்துடன் ஒன்றிணைப்பார். | • நவீன தொழில்நுட்பம்<br>• அரங்கு<br>• ஒலி<br>• ஒளி<br>• ஒப்பனை<br>• பக்கவாத்தியங்கள் | • அரங்கு, ஒலி, ஒளி, ஒப்பனை, பக்கவாத்தியங்கள், உருப்படிகள் என்பவற்றை நவீன தொழில்நுட்பத்துடன் இணைப்பார்.<br>• புத்தாக்க முயற்சிகளை முன்வைப்பார். | 06 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 5.0 | சாஸ்திரிய நடனங்களுடன் சம்பந்தப்பட்ட வரலாற்று ரீதியான விடயங்களை உய்த்தறிவார். | 5.1 இலங்கையின் சாஸ்திரிய நடனங்களின் பின்னணிகளை அறிந்து வேறுபாடுகளைக் காண்பார். | • உடரட்ட நடனம்<br>• பாதரட்ட நடனம்<br>• சபரகமுவ நடனம் | • உடரட்ட நடனம், பஹதரட்ட நடனம், சபரகமுவ நடனம் என்பற்றிற்கு இடையிலான வேறுபாட்டை ஆராய்து குறிப்பிடுவார். | 10 |
| | | 5.2 இலங்கையில், இந்தியாவில் உள்ள கலை வளர்க்கும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பற்றி ஆய்ந்து அறிவார். | • கலாஷேத்திரா<br>• சங்கீத வித்வசபை (Music Acadamy)<br>• இராமநாதன் நுண்கலைத்துறை<br>• விபுலானந்தா இசை நடனக் கல்லூரி | • முக்கியமான இரு நிறுவனங்களான கலாஷேத்திரா, சங்கீத வித்வசபை கலைகளை வளர்த்தமை, கலைஞர்களை உருவாக்கியமை பற்றிக் குறிப்பிடுவார்.<br>• இராமநாதன் நுண்கலைத்துறை, விபுலானந்தா இசை நடனக்கல்லூரி ஆகியன கலைகளை வளர்க்கும் விதம் பற்றி விபரிப்பார். | 15 |
| | | 5.3 பரதநடன கலைஞர்களின் கலைப் பின்னணியை தேடி அறிவார். | • ஏரம்பு சுப்பையா<br>• வீரமணி ஐயர்<br>• தஞ்சை சு.பொன்னையா<br>• கீதாஞ்சலி நல்லையா | • பெரியோர்களின் வாழ்க்கைக் குறிப்புகளையும் அவர்களின் கலைப்பணிகளையும் அறிந்து பட்டியற்படுத்துவார். | 10 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| | | 5.4 கூத்தின் வரலாற்றுப் பின்னணிகளை ஆராய்ந்து அறிவார். | • மட்டக்களப்புக் கூத்து<br>• மன்னார்கூத்து<br>• மலையகக் கூத்து<br>• யாழ்ப்பாணக் கூத்து | • கூத்துக்கள் தமிழர்களின் மரபு வழியான நாடக வடிவங்கள் என்பதை குறிப்பிடுவார்.<br>• இவை ஆடல், பாடல், உரையாடல் மூலம் கதை சொல்லும் பண்பினைக் கொண்டவை என்பதை கூறுவார்.<br>• இக் கூத்துக்களுக்குத் தனித்துவம் காணப்படுவதை எடுத்தியம்புவார்.<br>• கூத்து கிராம மக்களின் வாழ்வியலோடு இணைந்தது என்பதைக் கூறுவார்.<br>• மட்டக்களப்புக் கூத்து மட்டக்களப்பு மக்களால் ஆடப்படும் என்பதைக் குறிப்பிடுவார்.<br>• மன்னார் கூத்தில் இந்து, கிறிஸ்தவக் கதைகள் இடம்பெறும் என்பதைக் கூறுவார்.<br>• மலையகக்கூத்து மலையக மக்களால் ஆடப்படும் என்பதை அறிந்து குறிப்பிடுவார்.<br>• யாழ்ப்பாணக் கூத்து யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் என்பதைக் கூறுவார். | 15 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| | | 5.5 சிங்கள மக்களினதும் தமிழ் மக்களினதும் நடனங்களை ஒப்பிட்டு வேறுபாடு காண்பார். | • பரதம் , கண்டிய நடனங்கள் | • கண்டிய நடனத்தின் வரலாற்றுப் பின்னணியை அறிந்துகொள்வார்.<br>• பரத நடனத்தின் வரலாற்றுப் பின்னணியை அறிந்துகொள்வார்.<br>• இரு நடனங்களினதும் ஆடல் முறைகள் பற்றிக் குறிப்பிடுவார்.<br>• இரு நடனங்களையும் ஒப்பீடு செய்வார். | 06 |

# முதலாம் தவணை

**தேர்ச்சி 1.0** : இலங்கை இந்திய சாஸ்திரிய நடனங்களை நயப்பார்.

**தேர்ச்சிமட்டம் 1.1** : வெவ்வேறு பிரதேசங்களுக்குரிய கூத்து வகைகளை நயப்பார்.

**கற்றற்பேறுகள்** :

- வடமோடி, தென்மோடி, காத்தவராயன்கூத்து, காமன்கூத்து, வசந்தன் கூத்து ஆகிய கூத்துக்களின் ஒருமைப்பாடான அம்சங்களை நயந்து வெளிப்படுத்துவார்.
- அவற்றிற்கிடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு கூறுவார்.
- இவற்றிற்கான சிறப்பம்சங்களை நயந்து விமர்சனங்களை முன்வைப்பார்.
- கிராமப்புற மக்களின் மண் வாசனையுடன் பரிமளித்த கலைகள் என்பதை ஏற்றுக்கொள்வார்.

**செயற்பாடு 1.1.1** : வடமோடி, தென்மோடி, காத்தவராயன் கூத்து, காமன்கூத்து, வசந்தன் கூத்து ஆகிய கிராமியக் கலைகளை விமர்சித்தல்.

**பாட உள்ளடக்கம்** : வடமோடி, தென்மோடி, காத்தவராயன்கூத்து, காமன் கூத்து, வசந்தன் கூத்து ஆகிய கூத்துக்களிற்குரிய ஆடை ஆபரணங்கள், இசை, ஒப்பனை, பக்கவாத்தியக்கருவிகள், தாளக்கட்டு, ஆட்ட அமைப்பு முறை, இவ்வாட்ட முறைமைகளுக்கும் பரதநாட்டிய அமைப்பு முறைகளுக்குமிடையிலான வேறுபாடுகள் ஆகியவற்றில் தாம் அவதானித்தவற்றை முன்வைத்தல்.

**பாடவேளைகள்** : 10

**தரவிருத்தி உள்ளீடுகள்**: காணொளி இறுவட்டு

**அறிமுகம்** : தாம் பார்வையிட்ட நாட்டுக்கூத்து வகைகளில் அவதானித்த சகல விடயங்களையும் பற்றி விமர்சிக்கும் ஆற்றலைப் பெறவேண்டும் என்பது கருத்திற்கொள்ளப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

- வடமோடி, தென்மோடி, காத்தவராயன்கூத்து, காமன் கூத்து, வசந்தன் கூத்து. இக் கூத்துக்கள் அடங்கிய காணொளி இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.
- பார்வையிட்ட கூத்துக்கள் தொடர்பாகக் கலந்துரையாடல்.
- இக் கூத்துக்களுக்கிடையே பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் காணப்பட்ட ஒற்றுமை, வேற்றுமைகளை முன்வைத்தல்.
    - ஆட்ட அமைப்பு
    - ஆடை, ஆபரணம், ஒப்பனை
    - இசை, பக்கவாத்தியக்கருவிகள்
- இக் கூத்துக்களில் சிறப்பாகக் காணக்கூடிய கிராமியப் பண்புகளைக் குறிப்பிடுவார்.
- கூத்துக்கள், நிலவும் பிரதேசங்களின் மொழி வழக்கு, சம்பாசனை ஆகியவற்றைப் பிரதிபலிப்பதைக் குறிப்பிடுவார்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மலையகம் ஆகியவற்றிற்கான கூத்துக்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- அவற்றின் அமைப்பு முறையைக் கூறுவார்.
- அவற்றின் ஆடை, ஆபரணங்கள் பற்றிக் குறிப்பிடுவார்.
- ஒப்பனையின் பொருத்தப்பாடு பற்றிக் கூறுவார்.
- இசை, பக்கவாத்தியக் கருவிகள் பற்றிக் குறிப்பிடுவார்.
- மேற்கூறிய கூத்து வகைகளுக்கிடையான ஒற்றுமை, வேற்றுமைகளை முன்வைப்பார்.
- அவ்வப் பிரதேசங்களுக்குரிய கிராமியப் பண்புகள் கூத்துக்களிற் பிரதிபலிப்பதைக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 2.0** : ஆக்கத்திறனை வெளிப்படுத்துவர்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : கோர்வைகள் அமைத்து ஆற்றுகைப்படுத்துவார்.

**கற்றற்பேறு** :

- ஜதிகளைப் பட்டியற்படுத்துவார்.
- அவற்றைப் பெயரிடுவார்.
- ஆதி, ரூபக தாளங்களில் குறித்த ஜதி அமைப்புடன் கோர்வைகள் அமைப்பார்.
- அவற்றைக் கொலுப்பிப்பார்.
- கோர்வைகளை நயப்பார்.

**செயற்பாடு 2.1.1** : ஆதி, ரூபக தாளங்களுக்குக் கோர்வைகள் அமைத்தல்.

**பாடவேளைகள்** : 10

**பாட உள்ளடக்கம்** : ஆதி தாளத்தில் 4 ஆவர்த்தனத்திலும் ரூபக தாளத்தில் 6 ஆவர்த்தனத்திலும் கோர்வைகளை அமைத்து அபிநயிக்கும் திறனைப் பெறுதல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**: தட்டுக்கழி, தட்டுப்பலகை, அட்டை.

**அறிமுகம்** : குறித்த ஆவர்த்தனங்களில் ஆதி, ரூபக தாளங்களில் கோர்வைகளை அமைத்து அபிநயிக்கும் திறனைப் பெறவேண்டும் என்பது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கின்றது.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

- ஏற்கனவே கோர்வைகள் அமைத்த முன் அனுபவத்தினைப் பயன்படுத்திக் கோர்வைகளை அமைத்தல்.
- அவற்றைக் கொலுப்பித்தல்.
- தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுதல்.
- ஆசிரியரின் வழிகாட்டலுடன் அபிநயித்துக் காட்டுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- ஆதி, ரூபக தாளங்களில் குறிப்பிட்ட ஆவர்த்தனங்களில் கோர்வைகள் அமைத்துக் காட்டுவார்.
- கோர்வைகளைக் கொலுப்பிப்பார்.
- தாளங்களுக்கமைய கோர்வைகளை அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி 3.0** : நடன உருப்படிகளை ஆடியும் பாடியும் கொலுப்பித்துக் காட்டுவர்.

**தேர்ச்சி மட்டம் 3.8** : பாதபேதங்களை ஆடிக் காட்டுவார்.

**கற்றற் பேறுகள்** :
* பாதபேதங்களைக் கூறுவார்.
* பாதபேதங்களின் வகைகளைக் கூறுவார்.

**செயற்பாடுகள் 3.8.1** : பாதபேதங்களையும் அவற்றின் பிரிவுகளையும் அறிந்து அபிநயித்தல்.

**பாடவேளைகள்** : 06

**பாட உள்ளடக்கம்** : பாதபேதங்களும் அவற்றின் வகைகளும்

**தரவிருத்தி உள்ளீடுகள்**: : பாதபேதங்களும் அவற்றின் வகைகளும் எழுதப்பட்ட அட்டை, இறுவட்டு, காணொளி.

**அறிமுகம்** : பாதபேதங்களையும் அவற்றின் வகைகளையும் மாணவர்கள் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும் என்பது கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

* பாதபேதங்களும் அவற்றின் வகைகளும் எழுதப்பட்ட அட்டையினைக் காட்சிப்படுத்தி அவை பற்றிக் கலந்துரையாடுதல்.
* பாதபேதத்தின் சுலோகத்தினை ஆசிரியர் சொல்லிக் காட்டுதல்.
* மண்டலபேதம், ஸ்தானபேதம், உத்பிலவனபேதம், பிரமரிபேதம், சாரிபேதம் ஆகியவற்றின் ஸ்லோகங்களைச் சொல்லிக் காட்டுதல்.
* தொடர்ந்து மாணவர்களும் சொல்லிப் பழகுவதற்கு வழிப்படுத்தல்.
* பாதபேதங்களை அங்கத்துடன் மாணவர்களுக்கு அபிநயித்துக் காட்டுதல்.
* ஆசிரியரைத் தொடர்ந்து மாணவர்கள் பாதபேதத்தினைச் செய்வதற்குப் பயிற்சியளித்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

* பாதபேதங்களின் வகைகளைக் கூறுவார்.
* பாதபேதத்தின் ஸ்லோகத்தைச் சரியான உச்சரிப்புடன் கூறுவார்.
* ஒவ்வொரு பாதபேதத்தினையும் அங்க சுத்தத்துடன் அபிநயித்துக் காட்டுவார்.
* நாட்டடவு, தத்தெய்தாம், மண்டியடவு, தித்தெய்ந்த தாதெய், தட்டுமெட்டடவு போன்ற அடவுகளில் பிரயோகிக்கும் பாதபேதங்களை இனங்கண்டு கூறுவார்.

**தேர்ச்சி 3.0** : நடன உருப்படிகளை ஆடியும் பாடியும் கொலுப்பித்துக் காட்டுவர்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : பரதநாட்டிய உருப்படிகளை அபிநயித்துக் காட்டுவார்.

**கற்றற் பேறுகள் :**

- உத்தராங்கப் பகுதியில் இடம்பெறும் உப பகுதிகளைப் பெயரிடுவார்.
- உத்தராங்கப் பகுதியைப் பாடிக் கொலுப்பிப்பார்.
- உத்தராங்கப் பகுதியை அபிநயிப்பார்.

**செயற்பாடு 3.1.1** : பதவர்ணத்தின் உத்தராங்கப் பகுதியினை அபிநயித்துக் கொலுப்பிப்பார்.

**பாடவேளைகள்** : 35

**பாட உள்ளடக்கம்** : பதவர்ணத்தின் உத்தராங்கப் பகுதி

**தரவிருத்தி உள்ளீடுகள்**:

இறுவட்டு, ஒளிப்பதிவுக்கருவி, பதவர்ணம், ஸ்வரக் கோர்வைகள் எழுதப்பட்ட அட்டை.

**அறிமுகம்** : பதவர்ணத்தின் உத்தராங்கப் பகுதியை முழுமையாக அபிநயித்துக் கொலுப்பிக்கும் ஆற்றலைப் பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

- ஒளிப்பதிவுக் கருவி மூலம் பதவர்ணத்தின் உத்தராங்கப் பகுதியினை முழுமையாகப் பார்வையிடச் செய்தல்.
- சரணப் பகுதியை ஆசிரியர் ஆடிக் காண்பித்தல்.
- பின் மாணவரை வழிப்படுத்தி ஆடச் செய்தல்.
- சரண ஸ்வரக் கோர்வைகளை ஆசிரியர் ஆடிக்காண்பித்தல்.
- பின் மாணவரை வழிப்படுத்தி ஆடச் செய்தல்.

- அபிநயப் பகுதியை ஆசிரியர் ஆடிக்காண்பித்தல்.
- மாணவரை வழிப்படுத்தி அபிநயிக்கச் செய்தல்.
- முழுமையான பயிற்சி வழங்கல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- பதவர்ணத்தின் உத்தராங்கப் பகுதியில் இடம்பெறும் பகுதிகளைக் கூறுவர்.
- சரணப் பகுதியை அபிநயிப்பர்.
- சரண ஸ்வரக்கோர்வைகளையும், சாகித்தியத்தையும் அபிநயித்துக் காட்டுவர்.
- உத்தராங்கப் பகுதிக்குத் தாளம் கொலுப்பித்துக் காட்டுவர்.

**தேர்ச்சி 4.0** : நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் கோவைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1 :** நடராஜ திருவுருவத்தை விளக்குவார்.

**கற்றற் பேறுகள் :**

- திருவுருவத்தின் பகுதிகளும் அணிகலன்களும் குறிப்பவற்றைப் பட்டியற்படுத்துவார்.
- ஐஞ்செயல்களைக் குறிப்பதே பஞ்ச கிருத்தியம் என்பதை ஏற்றுக்கொள்வார்.

**செயற்பாடு 4.1.1** : நடராஜ திருவுருவ தத்துவத்தையும் பஞ்சகிருத்திய தத்துவத்தையும் அறிந்து குறிப்பிடுதல்.

**பாடவேளைகள்** : 04

**பாட உள்ளடக்கம் :** நடராஜ திருவுருவத்தின் தத்துவம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:** நடராஜ திருவுருவப் படம், நூல்கள்

**அறிமுகம்** : ஆடல் அரசனான நடராஜனின் திருவுருவம் பஞ்சகிருத்தியம் ஆகியன விளக்கும் பொருளை மாணவர்கள் அறிந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

- நடராஜ திருவுருவத்தைக் காட்சிப்படுத்தல்.
- பஞ்ச கிருத்தியம் என்றால் என்ன என்பது பற்றி மாணவருடன் கலந்துரையாடல்.
- ஓம்காரத்தின் வடிவம் பற்றிக் கலந்துரையடல்.
- ஆடை, அணிகலன்கள் உணர்த்துவது பற்றிக் கலந்துரையாடல்.
- சுருக்கக் குறிப்பெடுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- நடராஜப் பெருமானின் திருவுருவம் ஐஞ்செயல்களைக் குறிப்பதைக் குறிப்பிடுவார்.
- ஐந்தொழில்கள் , ஐஞ் செயல்களைக் குறிப்பிடுவார்.
- பெருமானின் திருவுருவப் பகுதிகள் அணிகலன்கள் உணர்த்தும் பொருளை ஒழுங்குபடுத்துவர்.

**தேர்ச்சி 4.0** : நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : அரங்கம் பற்றி அறிந்து கொள்வார்.

**கற்றற் பேறுகள்** :

- நாட்டிய சாஸ்திரம் கூறும் அரங்கம், தற்கால அரங்கம் என்பவற்றின் வேறுபாடுகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- ஒலி, ஒளி என்பன மேடை நிகழ்ச்சிகளுக்கு அளிக்கும் பங்களிப்பினை ஒழுங்கமைப்பார்.

**செயற்பாடு 4.2.1** : அரங்கம் ஒலி, ஒளி, காட்சி அவதானிப்புப் பற்றியும் அரங்கத்தில் விலக்கத்தக்கவை எவை என்பது பற்றியும் அறிதல்.

**பாடவேளைகள்** : 06

**பாட உள்ளடக்கம் :** அரங்கம் ஒலி, ஒளி, காட்சி அவதானிப்பு

**தரவிருத்தி உள்ளீடுகள்**: குறிப்பு முறையில் எழுதப்பட்ட அட்டை

**அறிமுகம்** : நடன அரங்கம், ஒலி, ஒளி, காட்சி அமைப்பு, அரங்கத்தில் விலக்க வேண்டியவை ஆகிய விடயங்கள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றற் கற்பித்தற் செயலொழுங்கு :**

- குறிப்பு முறையில் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- அரங்கு :
  - ✓ அரங்கு என்றால் என்ன என்பதை விளக்குதல்.
  - ✓ பரதர் நாட்டிய சாஸ்திரத்தில் கூறும் அரங்கை விளக்குதல்.
  - ✓ அரங்கம் விகிருதம், சதுரசிரம், திரியசிரம் என மூன்று வகைப்படும் என்பதனைக் கூறுதல்.
- ஒளி :
  - ✓ ஒளியமைப்பின் அவசியம் பற்றி விளக்குதல்.
  - ✓ மேடை ஒளிகளின் வகைகள் பற்றிக் குறிப்பிடல்.

- ✓ மேடை ஒளியூட்டலின் பண்புகள் பற்றி விளக்குதல்.

- ➢ ஒலி :
  - ✓ ஒலியமைப்பின் அவசியம் பற்றி விளக்குதல்.
  - ✓ ஒலியமைப்பின் உத்திகள் பற்றி விளக்குதல்.
  - ✓ ஒலியமைப்பில் பயன்படுத்தப்படும் குறியீடுகள் பற்றிக் குறிப்பிடுதல்.

- ➢ காட்சியமைப்பு :
  - ✓ காட்சியமைப்பு என்றால் என்ன என்பதை விளக்குதல்.
  - ✓ காட்சியமைப்பின் அவசியம் பற்றிக் குறிப்பிடுதல்.
  - ✓ காட்சியமைப்பு எவற்றைப் புலப்படுத்தும் என்பதை விளக்குதல்.
  - ✓ அரங்கத்தில் விலக்க வேண்டிய விடயங்கள் பற்றிக் கூறுதல்.
  - ✓ மாணவர் சுருக்கக் குறிப்பெடுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- ➢ பரதர் வகைப்படுத்திய அரங்குகளைக் கூறுவார்.
- ➢ அரங்கின் வகைகளைக் குறிப்பிடுவார்.
- ➢ ஒளியமைப்பின் வகைகளைக் குறிப்பிடுவார்.
- ➢ ஒலியமைப்பின் அவசியம் பற்றிக் கூறுவார்.
- ➢ அரங்கத்தில் விலக்க வேண்டிய விடயங்களைக் கூறுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவர்.

**தேர்ச்சி மட்டம் 4.4** : கிராமிய இசைக்கருவிகளை இனங்கண்டு விளக்குவார்.

**கற்றற்பேறுகள் :**

- கிராமிய இசைக் கருவிகளை அறிந்து பெயரிடுவார்.
- இசைக் கருவிகளின் பயன்பாடு பற்றி அறிந்து குறிப்பிடுவார்.

**செயற்பாடு 4.4.1** : தப்பு, தாளம், பறை, சங்கு, மத்தளம், சேமக்கலம் ஆகிய கிராமிய இசைக் கருவிகளைப் பட்டியற்படுத்தி அவற்றின் பயன்பாடு பற்றி அறிந்து குறிப்பிடுவார்.

**பாடவேளைகள் :**10

**பாட உள்ளடக்கம் :** தப்பு, தாளம், பறை, சங்கு, மத்தளம், சேமக்கலம்

**தரவிருத்தி உள்ளீடுகள்**: இசைக் கருவிகள் படங்கள்.

இவ் இசைக் கருவிகள் பயன்படுத்தப்படும் சில ஒளிக் காட்சிகள்.

**அறிமுகம்** : கிராமிய இசைக் கருவிகளையும் அவற்றின் பயன்பாடு பற்றி அறியும் திறனையும் அவற்றின் விபரங்களையும் அறிந்திருக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

- கிராமிய இசைக் கருவிகள் சில கூறுதல்.
- இவ்விசைக் கருவிகளின் பயன்பாடு பற்றிய ஒளிப்படங்கள் சில (VCD) காட்சிப்படுத்தல்.
- பயன்பாடு பற்றிய குறிப்பெடுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- கிராமிய இசைக் கருவிகள் சில கூறுவார்.
- அவற்றின் பயன்பாடு பற்றிக் கூறுவார்.

**தேர்ச்சி 5.0** : சாஸ்திரிய நடனங்களுடன் சம்பந்தப்பட்ட வரலாற்று ரீதியான விடயங்களை உய்த்தறிவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : இலங்கையின் சாஸ்திரிய நடனங்களின் பின்னணியைத் தெரிந்து கொள்வார்.

**கற்றற்பேறுகள் :**

- உடரட்ட நடனம், பஹுதரட்ட நடனம், சபரகமுவ நடனம் ஆகியவற்றின் அமைப்பு முறை பற்றிக் குறிப்பிடுவார்.
- இந் நடனங்களுக்குப் பயன்படுத்தப்படும் ஆடை, ஆபரணங்கள், ஒப்பனை, இசை, பக்கவாத்தியக் கருவிகள் என்பவை பற்றி அறிந்து கூறுவார்.
- உடரட்ட, பஹுதரட்ட, சபரகமுவ நடனம் என்பவற்றிற்கிடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளை ஆராய்ந்து குறிப்பிடுவார்.

**செயற்பாடு 5.1.1** : உடரட்ட நடனம், பஹுதரட்ட நடனம், சபரகமுவ நடனம் ஆகிய நடனங்கள் பற்றி அறிதல்.

**பாடவேளைகள்** : 10

**தரவிருத்தி உள்ளீடுகள்**: உடரட்ட, பஹுதரட்ட, சபரகமுவ ஆகிய நடனங்கள் அடங்கிய காணொளி இறுவட்டு, இந் நடனங்களின் விளக்கம் பற்றிய சுருக்கக் குறிப்புகள்.

**அறிமுகம்** : மேற்குறிப்பிட்ட நடனங்கள் பற்றி அறிந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- காணொளி இறுவட்டின் காட்சிப்படுத்தல்.
- உடரட்ட, பஹுதரட்ட, சபரகமுவ நடனங்கள் பற்றி விளக்குதல்.
- சுருக்கக் குறிப்பு எடுக்கச்செய்தல்.
- மேற்கூறிய நடனங்களின் ஒற்றுமை, வேற்றுமைகளை முன்வைத்தல். (ஆடை, ஆபரணம், ஒப்பனை, இசை, பக்கவாத்தியக் கருவிகள்.)

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- உடரட்ட, பஹதரட்ட, சபரகமுவ ஆகிய நடனங்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- அதன் அமைப்பைக் கூறுவார்.
- அவற்றின் ஆடை, ஆபரணங்கள் பற்றிக் குறிப்பிடுவார்.
- ஒப்பனையின் பொருத்தப்பாடு பற்றிக் குறிப்பிடுவார்.
- இசை, பக்கவாத்தியக் கருவிகளைப் பற்றிக் குறிப்பிடுவார்.
- இந் நடனங்களுக்கிடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 5.0** : சாஸ்திரிய நடனங்களுடன் சம்பந்தப்பட்ட வரலாற்று ரீதியான விடயங்களை உய்த்தறிவார்.

**தேர்ச்சி மட்டம் 5.4** : கூத்தின் வரலாற்றுப் பின்னணிகளை ஆராய்ந்து அறிவார்.

**கற்றற் பேறுகள்** :

- மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார் கூத்துக்கள்.
- தமிழர்களின் மரபுவழியான நாடக வடிவங்கள் என்பதை அறிந்து குறிப்பிடுவார்.
- ஆடல், பாடல், உரையாடால் மூலம் கதை சொல்லும் பண்பினைக் கொண்டவை என்பதை ஏற்றுக்கொள்வார்.
- கூத்துக்கள் கிராம மக்களின் வாழ்வியலோடு இணைந்தது என்பதை ஏற்றுக்கொள்வார்.
- இக் கூத்துக்களுக்குத தனித்துவம் காணப்படுவதை ஏற்றுக்கொள்வார்.
- மட்டக்களப்புக் கூத்து, மட்டக்களப்பு மக்களால் ஆடப்படும் என்பதை அறிந்து குறிப்பிடுவார்.
- மன்னார்க் கூத்தில் கிறிஸ்தவக் கதைகள் இடம்பெறும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- மலையகக்கூத்து, மலையக மக்களால் ஆடப்படும் என்பதை அறிந்து கூறுவார்.
- யாழ்ப்பாணக்கூத்து யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் என்பதை ஏற்றுக்கொள்வார்.

**செயற்பாடு 5.4.1** : மட்டக்களப்பு கூத்து, மன்னார் கூத்து, மலையகக் கூத்து, யாழ்ப்பாணக் கூத்து பற்றி அறிவார்.

**பாடவேளைகள்** : 15

**பாட உள்ளடக்கம்** : மட்டக்களப்பு கூத்து, மன்னார் கூத்து, மலையகக் கூத்து, யாழ்ப்பாணக் கூத்து

**தரவிருத்தி உள்ளீடுகள்**: ➢ மட்டக்களப்பு, யாழ்ப்பாண, மன்னார் மலையகக் கூத்துக்கள் பற்றிய சுருக்கக் குறிப்புகள்.

➢ காணொளி இறுவட்டு.

**அறிமுகம்** : மேற்கூறப்பட்ட கூத்துக்கள் பற்றி அறிந்திருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

- காணொளி இறுவட்டினைக் காட்சிப்படுத்தல்.
- மட்டக்களப்பு, யாழ்ப்பாண, மன்னார், மலையகக் கூத்துக்கள் பற்றி சுருக்கக் குறிப்புக்கள் காட்சிப்படுத்தல்.
- காட்சிப்படுத்தியவை தொடர்பாகக் கலந்துரையாடல்.
- கூத்துக்களிற்கிடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளைப் பற்றிக் கலந்துரையாடல்.
- சுருக்கக் குறிப்பு எடுக்கச்செய்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார், மலையகக் கூத்து ஆகிய கூத்துக்களின் அமைப்பு முறையை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- இவற்றின் ஆடல், பாடல், உரையாடல், கதை சொல்லும் பண்புகள் பற்றிக் குறிப்பிடுதல்.
- அந்தந்தப் பிரதேசங்களுக்கே உரித்தான பண்புகளைக் கொண்டவை என்பதை இனங்கண்டு குறிப்பிடுவார்.

# இரண்டாம் தவணை

**தேர்ச்சி 1.0** : இலங்கை இந்திய சாஸ்திரிய நடனங்களை நயப்பார்.

**தேர்ச்சிமட்டம் 1.2** : கிராமியக் கலைகளை நயப்பார்.

**கற்றற்பேறுகள் :**

- கிராமியக் கலைகளான ஒயிலாட்டம், பொம்மலாட்டம், ஏந்தல் நடனம், குதிரையாட்டம் ஆகிய நடனங்களை ஒப்பீடு செய்வார்.
- அவற்றிற்கிடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு கூறுவார்.
- அவற்றின் ஆடை, ஆபரணங்கள், ஒப்பனை போன்றவற்றை ஒப்பிடுவார்.
- உபகரணங்களைப் பயன்படுத்தி ஆடப்படும் நடனங்களை வேறுபடுத்துவார்.

**செயற்பாடு 1.2.1** : ஒயிலாட்டம், பொம்மலாட்டம், ஏந்தல் நடனம், குதிரையாட்டம் ஆகிய கிராமிய நடனங்களை விமர்சித்தல்.

**பாட உள்ளடக்கம்** : ஒயிலாட்டம், பொம்மலாட்டம், ஏந்தல் நடனம் ஆகியவற்றில் தாம் அவதானித்த விடயங்களை முன்வைத்தல்.

**பாடவேளைகள்** : 10

**பாட உள்ளடக்கம் :** ஒயிலாட்டம், பொம்மலாட்டம், ஏந்தல் நடனம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**: காணொளி இறுவட்டு

**அறிமுகம்** : தாம் பார்வையிட்ட ஒயிலாட்டம், பொம்மலாட்டம், ஏந்தல் நடனம், குதிரையாட்டம் ஆகிய கிராமிய நடனங்களில் தாம் அவதானித்த சகல விடயங்களையும் பற்றி விமர்சிக்கும் ஆற்றலைப் பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- ஒயிலாட்டம், பொம்மலாட்டம், ஏந்தல் நடனம், குதிரையாட்டம் ஆகிய கிராமிய நடனங்கள் அடங்கிய காணொளி இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.
- பார்வையிட்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல்.

- குறிப்பிட்ட கிராமிய நடனங்கள் இடையே பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் காணப்பட்ட ஒற்றுமை, வேற்றுமைகளை முன்வைத்தல்.
    - ✓ நடன அமைப்பு (கிராமியப் பாங்கு)
    - ✓ ஆடை, ஆபரணம், ஒப்பனை
    - ✓ இசை, பக்கவாத்தியக் கருவி
    - ✓ பயன்படுத்தப்படும் உபகரணங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- ஒயிலாட்டம், பொம்மலாட்டம், ஏந்தல் நடனம், குதிரையாட்டம் ஆகிய கிராமிய நடனங்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- அவற்றின் அமைப்பு முறை பற்றிக் கூறுவார்.
- அவற்றின் ஆடை, ஆபரணங்கள் பற்றிக் குறிப்பிடுவார்.
- ஒப்பனையின் பொருத்தப்பாடு பற்றிக் கூறுவார்.

    - ✓ பயன்படுத்தப்படும் உபகரணங்களைக் குறிப்பிடுவார்.
    - ✓ இசை, பக்கவாத்தியக் கருவிகள் பற்றிக் குறிப்பிடுவார்.
    - ✓ மேற்கூறிய கிராமிய நடனங்களிற்கிடையேயான ஒற்றுமை, வேற்றுமைகளை அட்டவணை மூலம் முன்வைப்பார்.

**தேர்ச்சி 2.0** : ஆக்கத்திறனை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சிமட்டம் 2.2** : இராமாயணப் பாடலுக்கு அபிநயம் அமைப்பார்.

**கற்றற்பேறுகள் :**

- பாடலைப் பாடுவார்.
- அபிநயம் அமைத்து ஆடுவார்.
- சஞ்சாரி பாவத்தை வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 2.2.1** : "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்".

இராமாயணப் பாடலுக்கு அபிநயம் அமைப்பார்.

**பாடவேளைகள்** : 04

**பாட உள்ளடக்கம்** : இப் பாடலின் பொருளுக்குரிய அபிநயத்தினையும் பாடலிற்குப் பொருத்தமான கதைகளைச் சஞ்சாரியாகவும் தாமாகவே அமைத்து அபிநயிக்கும் திறனையும் பெறுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:** பாடல் வரிகள் எழுதப்பட்ட அட்டை, தட்டுக்கழி, தட்டுப்பலகை.

**அறிமுகம்** : பாடல்வரிகளின் பொருள் உணர்ந்து தாமே அபிநயம் அமைக்கும் திறனைப் பெறவேண்டும் என்பது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கின்றது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- பாடல் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ஆசிரியர் பாடல்வரிகளைப் பாடிக்காட்டடல்.
- பாடலின் கருத்தைக் கூறித் தாமாகவே அபிநயம் செய்வதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
- ஆசிரியர் அவதானித்துத் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் ஆலோசனை வழங்கி முழுமைபெறச் செய்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- பாடலைப் பாடிக் காட்டுவார்.
- பாடலின் கருத்தைக் கூறுவார்.
- பாடலின் கருத்துக்கேற்ப மாணவர்கள் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி** **3.0** : நடன உருப்படிகளை ஆடியும் பாடியும் கொலுப்பித்துக் காட்டுவார்.

**தேர்ச்சிமட்டம் 3.2** : நாயக நாயகி பாவத்தினை வெளிப்படுத்தும் உருப்படியினை அபிநயிப்பார்.

**கற்றற்பேறுகள் :** இப் பாட அலகினைக் கற்றுமுடித்த பின்னர் மாணவர்கள்

- பதத்திற்குரிய முத்திரைகளைப் பயன்படுத்தி அபிநயிப்பார்.
- பாவத்துடன் பதத்தினை முன்வைப்பார்.
- பதத்தினை ராகத்துடன் பாடிக் கொலுப்பிப்பார்.

**செயற்பாடு 3.2.1** : பதம் எனும் உருப்படியினைக் கொலுப்பித்து ஆடிக்காட்டுவார்.

**பாட உள்ளடக்கம்** : வருவேன் வருவேன் என்று அல்லது என்னமோ கனமாய் இருக்குதடி என்ற பதம்

**பாடவேளைகள்** : 15

**தரவிருத்தி உள்ளீடுகள்**: இறுவட்டு, ஒளிப்பதிவுக் கருவி, தட்டுக்கழி, தட்டுப்பலகை

**அறிமுகம்** : பதத்தினை முழுமையாக அபிநயித்துக் கொலுப்பிக்கும் ஆற்றலைப் . பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- பதம் அடங்கிய இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.
- பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற பகுதிகளை ஆசிரியர் செய்து காண்பித்தல்.
- மாணவரை வழிப்படுத்தி ஆடச்செய்தல்.
- முழுமையாக ஆடச்செய்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- இராக, தாளத்தைக் குறிப்பிடுவர்.
- சாகித்தியகர்த்தா, நடன அமைப்பினைக் கூறுவர்.
- பதத்தினைத் தாளத்துடன் கொலுப்பித்து ஆடிக்காட்டுவர்.

**தேர்ச்சி** **3.0** : நடன உருப்படிகளை ஆடியும் பாடியும் கொலுப்பித்துக் காட்டுவார்.

**தேர்ச்சிமட்டம் 3.3** : பல சரணங்களைக் கொண்ட உருப்படியினை அபிநயிப்பார்.

**கற்றற்பேறுகள் :** இப் பாட அலகினைக் கற்றுமுடித்த பின்னர் மாணவர்கள்

- அஷ்டபதியினை முகபாவத்துடன் அபிநயிப்பார்.
- இவ் உருப்படியினைப் பாடிக் கொலுப்பிப்பார்.

**செயற்பாடு 3.3.1** : அஷ்டபதியினை அபிநயித்துக் கொலுப்பித்துக் காட்டுவர்.

**பாடவேளைகள்** : 15

**பாட உள்ளடக்கம்** : ஹரிரிக.......

**தரவிருத்தி உள்ளீடுகள்**: இறுவட்டு, ஒளிப்பதிவுக் கருவி, தட்டுக்கழி, தட்டுப்பலகை

**அறிமுகம்** : அஷ்டபதியினை முழுமையாக அபிநயித்துக் கொலுப்பிக்கும் ஆற்றலைப் பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- ஒளிப்பதிவுக் கருவிமூலம் அஷ்டபதியினைப் பார்வையிடச்செய்தல்.
- ஒவ்வொரு பகுதியாக ஆசிரியர் செய்து காண்பித்தல்.
- பின் மாணவரை வழிப்படுத்தி ஆடச்செய்தல்.
- முழுமையாக ஆடச்செய்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

அஷ்டபதியினைத் தாளத்துடன் கொலுப்பித்து அபிநயித்துக்காட்டுவர்

**தேர்ச்சி 3.0** : நடன உருப்படிகளை ஆடியும் பாடியும் கொலுப்பித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : சிருங்கார ரஸத்தை வெளிப்படுத்தும் உருப்படியினை அபிநயிப்பார்.

**கற்றற்பேறுகள்** :

- ஜாவளியை முகபாவத்துடனும் அங்க சுத்தத்துடனும் அபிநயிப்பார்.
- உருப்படியினைப் பாடிக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.4.1** : ஜாவளியைப் பாவத்துடன் அபிநயித்துக் கொலுப்பிப்பர்.

**பாட உள்ளடக்கம்** : சரிககொங்கு அல்லது மாலைமயங்கும் நேரம்

**பாடவேளைகள்** : 15

**தரவிருத்தி உள்ளீடுகள்**: இறுவட்டு, ஒளிப்பதிவுக் கருவி

**அறிமுகம்** : ஜாவளியை முழுமையாக அபிநயித்துக் கொலுப்பிக்கும் ஆற்றலைப் பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- ஒளிப்பதிவுக் கருவிமூலம் ஜாவளியினை முழுமையாகப் பார்வையிடச் செய்தல்.
- பகுதி பகுதியாக ஆசிரியர் ஆடிக்காண்பித்தல்.
- மாணவரை வழிப்படுத்தி ஆடச்செய்தல்.
- முழுமையான பயிற்சி வழங்கல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

ஜாவளியை முகபாவத்துடனும் அங்க சுத்தத்துடனும் கொலுப்பித்து ஆடிக்காட்டுவர்.

**தேர்ச்சி 4.0** : நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் கோவைப்படுத்துவார்.

**தேர்ச்சிமட்டம் 4.3.1** : பரத எண்ணக்கருக்களைப் பட்டியற்படுத்துவார்.

**கற்றற்பேறுகள்** : தாளங்களை இனங்கண்டு அட்டவணைப்படுத்துவார்.

**செயற்பாடு 4.3.1** : 175 தாள அட்டவணையினை அறிந்துகொள்வர்.

**பாட உள்ளடக்கம்** : 175 தாளம்

**பாடவேளைகள்** : 04

**தரவிருத்தி உள்ளீடுகள்** : 175 தாளவிளக்கம் அடங்கிய அட்டை

**அறிமுகம்** : சப்ததாளம் ஜாதிபேதத்தால் 35 தாளமாகி கதிபேதத்தால் 175 தாளங்கள் ஆகும் முறையினை அறிந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- 175 தாளமடங்கிய அட்டையினைக் காட்சிப்படுத்தல்.
- சப்த தாளங்கள் ஜாதிபேதத்தால் 35 தாளங்களாகிய முறையினை மீள நினைவுகூருதல்.
- 35 தாளங்கள் கதிபேதங்களினால் 175 தாளங்களாக மாற்றமடைதலை விளக்குதல்.
- குறிப்பெடுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- கதி பேதங்களைக் கூறுவார்.
- கதிபேதத்தால் 175 தாளமாகும் முறையினை விளக்குவார்.

**தேர்ச்சி 4.0** : நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் கோவைப்படுத்துவார்.

**தேர்ச்சிமட்டம் 4.3** : பரத எண்ணக்கருக்களை விளக்குவார்.

**கற்றற்பேறுகள் :**

- நாட்டிய நாடகம் எவ்வாறு அமையவேண்டும் என்பதைக் குறிப்பிடுவார்.
- யக்ஷகானம், பாகவதமேளா, குறவஞ்சி ஆகியவற்றின் அமைப்பு முறையினைக் குறிப்பிடுவார்.
- கூத்தனார், சாக்கியர் ஆகியோர் பற்றிக் குறிப்பிடுவார்.

**செயற்பாடு 4.3.2** : நாட்டிய நாடக அமைப்புப் பற்றியும் யக்ஷகானம், பாகவதமேளா, குறவஞ்சி அமைப்பு முறை, கூத்தனார், சாக்கியர் பற்றியும் குறிப்பிடுவார்.

**பாட உள்ளடக்கம்** :

- நாட்டிய நாடகமும் அதன் லஷ்ணமும்
  - ✓ யக்ஷகானம்
  - ✓ பாகவதமேளம்
  - ✓ குற்றாலக் குறவஞ்சி
  - ✓ கூத்தனார்
  - ✓ சாக்கியர்

**பாடவேளைகள்** : 14

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இறுவெட்டுக்கள்
- இந்த விடயம் சம்பந்தமான நூல்கள்

**அறிமுகம்** : யக்ஷகானம், பாகவத மேளம், குற்றாலக்குறவஞ்சி என்பனவற்றின் அமைப்பு முறையும் நாட்டிய நாடகம் அமைய வேண்டிய முறை பற்றியும் கூத்தனார், சாக்கியர் பற்றியும் விளக்கும் திறனைப் பெறவேண்டும் என்பது கருத்தில் கொள்ளப்படுகிறது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- யக்ஷகானம், பாகவதமேளம், குற்றாலக்குறவஞ்சி அடங்கிய இறுவெட்டுக்களைப் பார்வையிடச் செய்து அதன் அமைப்பு முறைகளைக் கூறுதல்.
- நாட்டிய நாடகம், கூத்தனார், சாக்கியர் பற்றிக் கூறுதல்.
- சுருக்கக் குறிப்பெடுப்பர்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- யக்ஷகானம், பாகவதமேளம், குற்றாலக்குறவஞ்சி அமைப்புப் பற்றிக் கூறுவார்.
- நாட்டிய நாடகத்தின் அமைப்பு முறையைக் குறிப்பிடுவார்.
- கூத்தனார், சாக்கியர் பற்றிக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் உய்த்தறிவார்.

**தேர்ச்சிமட்டம் 4.5** : பரதநாட்டிய இசைக் கருவிகளை அறிந்து பெயர் குறிப்பார்.

**கற்றற்பேறுகள் :**

- பரதநாட்டிய இசைக்கருவியான வீணையின் அமைப்பினை வரைந்து பெயரிடுவார்.
- அதன் பிரயோகம் பற்றி அறிந்து குறிப்பிடுவார்.

**செயற்பாடு 4.5.1** : வீணையின் அமைப்பு, பிரயோகம் பற்றிக் குறிப்பிடுவார்.

**பாட உள்ளடக்கம்** : பரதநாட்டிய இசைக்கருவி வீணையின் அமைப்பு,. பிரயோகம் பற்றி விளக்கும் திறனைப் பெறுதல்.

**பாடவேளைகள்** : 02

**தரவிருத்தி உள்ளீடுகள்**: வீணையின் படம் கீறிய அட்டை இயலுமானால் நிஜவீணை.

**அறிமுகம்** : வீணையின் அமைப்பு, பிரயோகம் ஆகியன பற்றி அறிந்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- வீணையின் படத்தைக் காட்சிப்படுத்தல்.
- வீணையின் அமைப்பினை வரைதல்.
- பாகங்களின் பெயர்களைக் குறித்தல்.
- பிரயோகம் பற்றிய விவரங்களைக் குறிப்பு எடுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- வீணையின் அமைப்பை வரைவார்.
- பாகங்களைப் பெயர் குறிப்பார்.
- அதன் பிரயோகம் பற்றி எடுத்துரைப்பார்.

**தேர்ச்சி 5.0** : சாஸ்திரிய நடனங்களுடன் சம்பந்தப்பட்ட வரலாற்று ரீதியான விடயங்களைக் கோவைப்படுத்துவார்.

**தேர்ச்சிமட்டம் 5.2** : இலங்கையில், இந்தியாவில் உள்ள கலை வளர்க்கும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் பற்றி ஆய்ந்து அறிவார்.

**கற்றற்பேறுகள்** :

- கலைமலரும் கலைக்கூடம் கலாஷேத்ரா, சங்கீத வித்வசபை போன்ற மன்றங்கள் கலைகளை வளர்த்தமை. கலைஞர்களை உருவாக்கியமை பற்றிக் கோவைப்படுத்துவார்.
- இராமநாதன் நுண்கலைத்துறை, விபுலானந்தா இசை நடனக் கல்லூரி ஆகியவை கலைகளை வளர்க்கும்விதம் பற்றி விளக்குவார்.
- இந் நிறுவனங்கள் கலைஞர்களை உருவாக்கி வெளியேற்றும் விதம் பற்றிக் குறிப்பிடுவார்.

**செயற்பாடு 5.2.1** : கலை வளர்க்கும் இலங்கை, இந்திய அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் பற்றி அறிதல்.

**பாட உள்ளடக்கம்** : கலாஷேத்ரா, சங்கீத வித்வசபை, இராமனாதன் நுண்கலைத்துறை, விபுலானந்தா இசைநடனக் கல்லூரி, வடஇலங்கைச் சங்கீதசபை போன்ற நிறுவனங்கள் கலை வளர்த்தமை பற்றி ஆராய்தல்.

**பாடவேளை** : 15

**தர உள்ளீடு** : கலாஷேத்ரா, சங்கீத வித்வசபை, இராமநாதன் நுண்கலைத்துறை, விபுலானந்தா இசை நடனக்கல்லூரி, வடஇலங்கைச் சங்கீதசபை ஆகிய நிறுவனங்கள் கலைக்கு ஆற்றிய தொண்டுகள், சேவைகள் அடங்கிய சுருக்கக் குறிப்புகள்.

**அறிமுகம்** : கலாஷேத்ரா, சங்கீதவித்வசபை, இராமநாதன் நுண்கலைத்துறை, விபுலானந்தா இசைநடனக் கல்லூரி, வட இலங்கைச் சங்கீத சபை போன்ற நிறுவனங்கள் கலைக்:கு ஆற்றிய, ஆற்றும் சேவைகள் பற்றி அறிந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கபட்டுகின்றது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் கலைக்காற்றிய சேவைகள் பற்றிய குறிப்புகளைக் காட்சிப்படுத்தல்.
- அவ் விடயம் தொடர்பாகக் கலந்துரையாடல்.
- சுருக்கக் குறிப்பு எடுக்கச் செய்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- இந் நிறுவனங்களின் தோற்றம், வளர்ச்சி பற்றிக் கூறுவார்.
- இந் நிறுவனங்கள் கலைக்கு ஆற்றிய பணிகளைப் பற்றிக் குறிப்பிடுவார்.
- இந் நிறுவனங்கள் கலைஞர்களை உருவாக்கும் விதம் பற்றி அறிந்து குறிப்பிடுவார்.

**தேர்ச்சி** **5.0** : சாஸ்திரிய நடனங்களுடன் சம்பந்தப்பட்ட வரலாற்று ரீதியான விடயங்களை உய்த்தறிவார்.

**தேர்ச்சிமட்டம் 5.5** : சிங்கள மக்களினதும் தமிழ் மக்களினதும் நடனங்களை ஒப்பிட்டு இனங்கண்டு கொள்வார்.

**கற்றற்பேறுகள்** :

- ஏற்கனவே கற்ற கண்டிய நடனத்தினை நினைவு கூருவார்.
- அவ்வாறே பரதநாட்டியத்தை நினைவு கூருவார்.
- கண்டிய நடனத்திற்கும் பரத நாட்டியத்திற்குமான ஒற்றுமை, வேற்றுமைகளை இனங்கண்டு ஒப்பிட்டு வேறுபாடு காண்பார்.

**செயற்பாடு 5.5.1** : கண்டிய நடனங்கள், பரதநாட்டிய நடனம் பற்றிய வேறுபாடுகளை அறிதல்.

**பாட உள்ளடக்கம்** : கண்டிய நடனங்கள், பரதநாட்டியம்.

**பாடவேளைகள்** : 06

**தரவிருத்தி உள்ளீடுகள்**:

- கண்டிய நடனங்கள், பரதநாட்டியம் அடங்கிய காணொளி இறுவட்டு.
- சுருக்கக் குறிப்புகள்.ட

**அறிமுகம்** : கண்டிய நடனம், பரதநாட்டியம் ஆகியவற்றை அறிந்து அவற்றினை ஒப்பீடு செய்து வேறுபாடு காணவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- காணொளி இறுவட்டினைக் காட்சிப்படுத்தல்.
- குறிப்பிட்ட இந் நடனங்களின் ஒற்றுமை, வேற்றுமைகளைக் கலந்துரையாடல்.

- இந் நடனம் பற்றிய சுருக்கக் குறிப்புகளைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடல்.
- சுருக்கக் குறிப்பெடுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- கண்டிய, பரத, பாரம்பரிய நடனங்களுக்குரிய ஒற்றுமை, வேற்றுமைகளை இனங்கண்டு வேறுபாடுகளைக் குறிப்பிடுவார்.

# மூன்றாம் தவணை

**தேர்ச்சி 1.0** : இலங்கை, இந்திய சாஸ்திரிய நடனங்களை நயப்பார்.

**தேர்ச்சிமட்டம் 1.3.1** : நாட்டிய நாடகங்களை நயப்பார்.

**கற்றற்பேறுகள் :**

- யக்ஷகானம், பாகவதமேளா, குறவஞ்சி ஆகியவற்றின் ஆடல் வேறுபாடுகளை இனங்கண்டு கூறுவார்.
- ஆடல்களின் கதையின் கருக்களை ஆராய்ந்து முன்வைப்பார்.
- ஆடற்கதைகளின் இசை, ஆடை, ஒப்பனை என்பவற்றின் வேறுபாடுகளைக் கூறுவார்.

**செயற்பாடு 1.3.1** : யக்ஷகானம், பாகவதமேளா, குறவஞ்சி ஆகிய நாட்டிய நாடகங்கள் பற்றி விமர்சித்தல்.

**பாட உள்ளடக்கம்** : யக்ஷகானம், பாகவதமேளா, குறவஞ்சி ஆகிய நாட்டிய நாடகங்களின் ஆடல் வேறுபாடுகள், கதைக் கருத்துக்கள், இசை, ஆடை ஆபரணங்கள், ஒப்பனை ஆகியவற்றில் அவதானித்த விடயங்களை முன்வைத்தல்.

**பாடவேளைகள்** : 10

**தரவிருத்தி உள்ளீடுகள்**: காணொளி இறுவட்டு

**அறிமுகம்** : தாம் பார்வையிட்ட யக்ஷகானம், பாகவதமேளா, குறவஞ்சி ஆகிய நாட்டிய நாடகங்களில் தாம் அவதானித்த சகல விடயங்களையும் பற்றி விமர்சிக்கும் ஆற்றலைப் பெறவேண்டும் என்பது கருத்திற்கொள்ளப்படுகின்றது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- யக்ஷகானம், பாகவதமேளா, குறவஞ்சி ஆகிய நாட்டிய நாடகங்கள் அடங்கிய காணொளி இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.
- பார்வையிட்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.

- குறிப்பிட்ட நாட்டிய நாடகங்களிற்கிடையே பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் காணப்பட்ட ஒற்றுமை, வேற்றுமைகளை முன்வைத்தல்.
    - ஆடை, ஆபரணம்.
    - ஒப்பனை
    - இசை, பக்கவாத்தியக் கருவிகள்
    - நாட்டிய நாடக அமைப்பு

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- யக்ஷகானம், பாகவதமேளா, குறவஞ்சி ஆகிய நாட்டிய நாடகங்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- அவற்றின் அமைப்புப் பற்றிக் கூறுவார்.
- அவற்றின் ஆடை, ஆபரணங்கள் பற்றிக் குறிப்பிடுவார்.
- ஒப்பனையின் பொருத்தப்பாடு பற்றிக் கூறுவார்.
- இசை, பக்கவாத்தியக் கருவிகள் பற்றிக் குறிப்பிடுவார்.
- மேற்கூறிய நாட்டிய நாடகங்களிற்கிடையேயான ஒற்றுமை வேற்றுமைகளை முன்வைப்பார்.

**தேர்ச்சி 2.0** : ஆக்கத்திறனை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சிமட்டம் 2.3** : ஆடல்களுக்கான ஒப்பனைகளைப் புனைந்து முன்வைப்பார்.

**கற்றற்பேறுகள் :**

- சாஸ்திரிய, கிராமிய நடனங்களின் உடை. முகச்சாயம், தலை அலங்காரம் ஆகியவற்றின் ஒப்பனைகளை வேறுபடுத்திக் காட்டுவார்.
- நாட்டிய நாடகத்தின் பாத்திரங்களை உடை, முகச்சாயம், தலை அலங்காரம் என்பவற்றை வைத்து வேறுபடுத்துவார்.
- முகச் சாயத்திற்குப் பயன்படுத்தப்படும் அம்சங்களைப் பெயர் குறிப்பார்.

**செயற்பாடு 2.3.1** : ஆடல்களுக்கான ஒப்பனைகளைப் புனைதல்.

**பாட உள்ளடக்கம்** : ஆடல்களுக்கான ஒப்பனைகளைப் பாத்திரங்களுக்கேற்றவாறு இனங்கண்டு தாமாகவே ஒப்பனை செய்யும் திறனைப் பெறுவார்.

**பாடவேளைகள்** : 10

**தரவிருத்தி உள்ளீடுகள்**: ஒப்பனைப் பொருட்கள் (பான் கேக், Pink power, உதட்டுச் சாயம், கண்மை, நகைகள், அலங்காரப் பொருட்கள் போன்ற பல)

**அறிமுகம்** : ஆடல்களுக்கான ஒப்பனைகளைப் பாத்திரத்திற்கேற்ப உணர்ந்து ஒப்பனை செய்யும் திறனைப் பெறவேண்டும் என்பது கருத்திற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- ஒப்பனைப் பொருட்களைக் காட்சிப்படுத்தல்.
- ஒப்பனைகளின் வேறுபாடுகளைப் பற்றிக் கலந்துரையாடுதல்.
- பாத்திரங்களுக்கு ஏற்ப ஒப்பனை செய்வதற்குரிய ஆலோசனைகளை வழங்கி ஒப்பனை செய்ய வழிகாட்டுதல்.
- ஒருவர் மற்றையவருக்கு ஒப்பனை செய்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- ஒப்பனையின் வேறுபாடுகள் பற்றிக் கூறுவார்.
- பாத்திரங்களுக்கேற்ப ஒப்பனை செய்துகாட்டுவார்.
- வெவ்வேறு விதமான நடனங்களுக்குப் பொருத்தமான முறையில் ஒப்பனை செய்வார்.

**தேர்ச்சி 3.0** : நடன உருப்படிகளை ஆடியும் பாடியும் கொலுப்பித்துக்காட்டுவர்.

**தேர்ச்சிமட்டம் 3.5** : விறுவிறுப்பான உருப்படியினை அபிநயிப்பார்.

**கற்றற்பேறுகள் :**

- தில்லானாவின் பாடலைக் கொலுப்பிப்பார்.
- கோர்வைகளைக் கொலுப்பிப்பார்.
- தில்லானாவை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.5.1** : தில்லானா உருப்படியினைக் கொலுப்பித்து ஆடிக்காட்டுவர்.

**பாட உள்ளடக்கம்** : பிலஹரி அல்லது

**பாடவேளைகள்** : 15

**தரவிருத்தி உள்ளீடுகள்**: இறுவட்டு, ஒளிப்பதிவுக் கருவி, கோர்வைகள் எழுதப்பட்ட அட்டை.

**அறிமுகம்** : தில்லானா எனும் உருப்படியினை முழுமையாக அபிநயித்துக் கொலுப்பிக்கும் ஆற்றலைப் பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- தில்லானா என்ற உருப்படியின் லக்ஷணத்தை ஆசிரியர் கூறுவார்.
- இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.
- ஒவ்வொரு கோர்வையாக ஆசிரியர் ஆடிக் காண்பித்தல்.
- மாணவரை வழிப்படுத்தி ஆடச்செய்தல்.
- ஆசிரியர் மெய்யடவுகளை ஒவ்வொன்றாக ஆடிக்காட்டுவார்.
- மாணவரை வழிப்படுத்தி ஆடச்செய்தல்.
- சரணப் பகுதியினை ஆசிரியர் செய்துகாட்டுவார்.
- மாணவரை வழிப்படுத்தி ஆடச்செய்தல்.
- முழுமையான பயிற்சி வழங்கல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- தில்லானா எனும் உருப்படியில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற பகுதிகள் உள்ளதென்பதைக் கூறுவார்.
- கோர்வைகளைத் தாளத்துடன் கொலுப்பித்து ஆடிக்காட்டுவார்.
- சரணப் பகுதிக்கு அபிநயம் செய்து காட்டுவார்.

**தேர்ச்சி 3.0** : நடன உருப்படிகளை ஆடியும் பாடியும் கொலுப்பித்துக் காட்டுவார்.

**தேர்ச்சிமட்டம் 3.6** : கண்டிய நடனத்தின் அடிப்படை அடவுகளை அபிநயித்துக்காட்டுவார்.

**கற்றற்பேறுகள் :**

- பாஸரம்ப 1 - 8 அடவுகளை அபிநயிப்பார்.
- கொடஸரம்ப 1 - 5 அடவுகளை அபிநயிப்பார்.

**செயற்பாடு 3.6.1** : கண்டிய நடனத்தின் அடிப்படை அடவுகளை ஆடுதல்.

**பாட உள்ளடக்கம்** : கண்டிய நடனம் பாஸரம்ப ,கொடஸரம்ப

**பாடவேளைகள்** : 20

**தரவிருத்தி உள்ளீடுகள்**: இறுவட்டு, ஒளிப்பதிவு நாடா, அடவுகளின் சொற்கட்டு எழுதப்பட்ட அட்டை.

**அறிமுகம்** : இவ்வடவுகளை முழுமையாகக் கொலுப்பிக்கும் ஆற்றலைப் பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.
- பாஸரம்ப அடவுகளை ஆசிரியர் செய்துகாட்டுதல்.
- மாணவரை வழிப்படுத்தி ஆடச்செய்தல்.
- கொடஸரம்ப அடவுகளை ஆசிரியர் செய்துகாட்டுதல்.
- மாணவரை வழிப்படுத்தி ஆடச் செய்தல்.
- பயிற்சி வழங்கல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- பாஸரம்ப, கொடஸரம்ப அடவுகளை லயத்துடன் ஆடிக்காட்டுவர்.

**தேர்ச்சி 3.0** : நடன உருப்படிகளை ஆடியும் பாடியும் கொலுப்பித்துக் காட்டுவார்.

**தேர்ச்சிமட்டம் 3.7** : தட்டுக்கழியில் அடவுகளைப் பயிற்சி செய்வார்.

**கற்றற்பேறுகள் :** இப் பாட அலகுகளைக் கற்று முடித்த பின்னர் மாணவர்கள்

- சகல அடவுகளுக்கும் தட்டுக்கழியில் நட்டுவாங்கம் செய்வார்.

**செயற்பாடு 3.7.1** : கற்ற அடவுகளைத் தட்டுக்கழியால் நட்டுவாங்கம் செய்துகாட்டுவர்.

**பாட உள்ளடக்கம்** : அடவுகள்

**பாடவேளைகள்** : 25

**தரவிருத்தி உள்ளீடுகள்**: தட்டுக்கழி, தட்டுப்பலகை, சொற்கட்டு எழுதப்பட்ட அட்டை.

**அறிமுகம்** : அடவுகளைத் திரிகாலத்திலும் தட்டுக்கழியால் நட்டுவாங்கம் செய்யும் ஆற்றலைப் பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- அடவுகளின் சொற்கட்டினை ஆசிரியர் கூறுவார்.
- பின் மாணவர் கூறுவார்.
- ஆசிரியர் அடவினைத் தட்டுக்கழியில் தட்டிக் காட்டுவார்.
- பின் மாணவரை வழிப்படுத்துவார்.
- சுயமாக மாணவர் நட்டுவாங்கம் செய்து காட்டுவார்.
- முழுமையான பயிற்சியில் ஈடுபடுவார்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- அடவுகளைத் தட்டுக்கழியில் நட்டுவாங்கம் செய்து காட்டுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் கோவைப்படுத்துவார்.

**தேர்ச்சிமட்டம் 4.6** : கல்வி முறைகளைக் குறிப்பிட்டு வேறுபாடு காண்பார்.

**கற்றற்பேறுகள் :**

- குருகுலக்கல்வி பற்றி அறிந்து குறிப்பிடுவார்.
- நிறுவனக் கல்வி பற்றி அறிந்து குறிப்பிடுவார்.
- குருகுலக்கல்வி, நிறுவனக் கல்வி இரண்டிற்குமான ஒப்பீட்டினைக் கோவைப்படுத்துவார்.

**செயற்பாடு 4.6.1** : குருகுலக்கல்வி, நிறுவனக்கல்வி பற்றிக் குறிப்பிட்டு ஒப்பிடுவார்.

**பாட உள்ளடக்கம்** : குருகுலக்கல்வி, நிறுவனக்கல்வி பற்றிக் கூறி ஒப்பிடும் திறனைப் பெறுவார்.

**பாடவேளைகள்** : 04

**தரவிருத்தி உள்ளீடுகள்**: இவை பற்றிய குறிப்புக்கள் எழுதப்பட்ட அட்டை

**அறிமுகம்** : குருகுலக்கல்வி, நிறுவனக்கல்வி பற்றி அறிந்து ஒப்பிடும் திறனையும் அறிந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- குறிப்புக்கள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- குருகுலக்கல்வி, நிறுவனக்கல்வி பற்றிக் கூறுவார்.
- இவற்றை ஒப்பிட்டுக் கூறுவார்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- குருகுலக்கல்வி. இலட்சணத்தை. அறிவா்ட
- குருகுலக்கல்வி, நிறுவனக் கல்வி இரண்டினையும் ஒப்பிடுவாா்

**தேர்ச்சி 4.0** : நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் கோவைப்படுத்துவார்.

**தேர்ச்சிமட்டம் 4.7** : பரதநாட்டியத்தை நவீன தொழட்பத்துடன் இணைப்பார்.

**கற்றற்பேறுகள் :**

- அரங்கு, ஒலி, ஒளி, ஒப்பனை, பக்கவாத்தியங்கள், உருப்படிகள் என்பவற்றை நவீன தொழில்நுட்பத்துடன் இணைக்கும் நுட்பத்தினை அறிந்து குறிப்பிடுவார்.
- முகச்சாயம், முக ஒப்பனைகளில் வேறுபாடுகளைக் காட்டுவதன் மூலம் பாத்திரங்களின் குணவியல்புகளை மதிப்பிடுவார்.
- அணியும் ஆடைகளிலும் வர்ணனைக்கு ஏற்ப கடுமையான ஒளி, மெல்லிய ஒளி, குவிய ஒளி (spot light) மூலமும் காட்சி வேறுபாட்டினை முன்வைப்பார்.
- மனநிலை வேறுபாட்டினைக் காட்டுவதற்கு ஒளிவேறுபாடுகளைப் பயன்படுத்தும் நுட்பத்தினை அறிந்து குறிப்பிடுவார்.
- இறுவட்டுக்களையும் இணையத்தையும் பயன்படுத்தி இசைகளை உருவாக்கி நவீன தொழில்நுட்பத்துடன் நடனத்தை ஆற்றுகை செய்யும் நுட்பத்தினை ஆராய்ந்தறிவார்.

**செயற்பாடு 4.7.1** : நவீன தொழில்நுட்பத்துடன் நடனத்தை இணைப்பார்.

**பாட உள்ளடக்கம்** : ஒளிரும் நிறங்கள்

மேடையை பலநிறங்களில் ஒளியூட்டல்

திரை ,மேடை ஒரேநேர பயன்பாடு

நவீன தொழில்நுட்பம்

**பாடவேளைகள்** : 06

**தரவிருத்தி உள்ளீடுகள்**: வெவ்வேறு ஒப்பனை, ஆடை அணிகலன்களுடனான படங்கள், இறுவட்டுக்கள்.

**அறிமுகம்** : பரதநாட்டியத்தை நவீன தொழில்நுட்பத்துடன் இணைக்கும் திறனைப் . பெறுதல்.

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- நவீன தொழில்நுட்பம் பற்றிக் கூறுதல்.
- அரங்கு, ஒலி, ஒளி, ஒப்பனை, பக்கவாத்தியங்கள் இவற்றை நவீன தொழில்நுட்பத்துடன் இணைத்தல் பற்றிக் கலந்துரையாடல்.
- நவீன தொழில்நுட்பத்துடன் இணைத்தல் பற்றிய விடயங்களை இணையம் மூலம் சேகரித்தல். Over head project மூலம் அரங்கிற் செய்யமுடியாத காட்சிகளைக் கொண்டுவருதல்.

  உ - ம் : கடலலைகள், சூரியன், அனர்த்தங்கள்.
- வர்ண வேறுபாடுகளில் மனநிலையைக் காண்பித்தல்.

  உ-ம் : இருவர்ணங்களைப் பாதிபாதியாக முகத்தில் பூசுதல் மூலம் ஒவ்வொரு புறம்திரும்பும் போது பாத்திரத்தின் மனநிலைகளை வெளிப்படுத்தலாம் எனக் கூறலாம்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- நவீன தொழில்நுட்பம் பற்றிக் கூறுவார்.
- இத் தொழில்நுட்பத்தினூடாக ஒளி,ஒலி, அரங்கு, ஒப்பனை, பக்கவாத்தியங்களை இணைத்து வெளிப்படுத்துவது பற்றி எடுத்துரைப்பார்.
- தேடல் மூலம் சேகரித்தவற்றை ஒப்படை மூலம் ஒப்புவிப்பார்.

**தேர்ச்சி 5.0** : சாஸ்திரிய நடனங்களுடன் சம்பந்தப்பட்ட வரலாற்று ரீதியான விடயங்களை உய்த்தறிவார்.

**தேர்ச்சிமட்டம் 5.3** : பரத நடனக் கலைஞர்களின் கலைப்பின்னணியை அறிந்துகொள்வார்.

**கற்றற்பேறுகள்** :

- பெரியார்களின் வாழ்க்கைக் குறிப்புக்களை அறிந்துகொள்வார்.
- பெரியார்கள் கலைக்காற்றிய பணிகளைப் பட்டியற்படுத்துவார்.

**செயற்பாடு** : பெரியார்களின் கலைப்பணியினை, வாழ்க்கைக் குறிப்புக்களை அறிதல்.

**பாட உள்ளடக்கம்** :

- ஏரம்பு சுப்பையா
- வீரமணி ஐயர்
- தஞ்சை சு.பொன்னையா

**பாடவேளைகள்** : 10

**தரவிருத்தி உள்ளீடுகள்**:

- பெரியார்களின் வாழ்க்கைக் குறிப்பு அடங்கிய சுருக்கக் குறிப்புகள்.
- பெரியார்களது நிழற்படங்கள்.

**அறிமுகம்** : மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெரியார்களின் வாழ்க்கைக் குறிப்புக்களையும் கலைப்பணிகளையும் அறிந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.ட

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு :**

- ஏரம்பு சுப்பையா, வீரமணிஐயர், தஞ்சை சு.பொன்னையா ஆகியோரின் நிழற்படங்களைக் காட்சிப்படுத்தல்.
- இப் பெரியார்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள் அடங்கிய சுருக்கக் குறிப்புக்களைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடல்.
- விளக்கங்களைக் குறிப்பெடுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- பெரியார்களின் வாழ்க்கைக் குறிப்புக்களை அறிந்து பெரியார்களின் கலைப்பணிகளைப் பட்டியற்படுத்துவார்.